# 6

# டால்பின்®

உன்னால் முடியும்

# தமிழ்

பருவம்
1, 2 & 3



புதிய பதிப்பு



100/100 உறுதி

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி விடைக் குறிப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**


டால்பின் பப்ளிகேசன்ஸ்®


Rahul Sadagopan
photography

# டால்பின்®

# உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு

# 6

**அரசு புதிய பாடத்திட்டத்தின் படி**
**விடைக் குறிப்பு அடிப்படையில்**
**தயாரிக்கப்பட்ட சிறப்பு உரைநூல்**


✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com


© All Copyrights reserved

**விலை : ரூ.135**

# பதிப்புரை

அன்னைத் தமிழை விழைந்து கற்கும் மாணவச் செல்வங்களுக்கு அன்பு வணக்கம். புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட பாடநூலுக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்டுள்ள இவ்வழிகாட்டியை உங்கள் கைகளில் தவழ விடுவதில் பெருமகிழ்வு அடைகிறோம்.

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை மாணவர்களின் அடைவைச் சோதிக்கும் வகையில் கற்றல் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு வினாத்தாள்கள் வடிவமைத்து ஒவ்வொரு தேர்விலும் கேட்கப்பட்டு வருகிறது. இச்சவாலை எதிர்கொள்ள ஏதுவாக இக்கையேட்டில் மீத்திற மாணவர் முழு மதிப்பெண் பெறும் விதமாகவும் மெதுவாகக் கற்போர் எளிமையாக விடையளிக்கும் வண்ணமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு, கற்பவை கற்றபின், ஒரு மதிப்பெண் வினா - விடைகள், குறுவினா, சிறுவினா மற்றும் சிந்தனை வினாக்களுக்கான விடைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கண வினா - விடைகள் மொழிப்பயிற்சிக்கான விடைகளோடு கூடுதல் வினா - விடைகளும் மாணவர் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் வகையில் சிறப்பான ஆசிரியர் குழுவைக் கொண்டு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சுயமாக எழுதும் விடைகள் எனத் தரமான தயாரிப்பாக உங்கள் மனம் விரும்பிப் படிக்கும் எழுத்து வடிவத்தில் இக்கையேடு உங்கள் ஆசிரியர்களின் பரிந்துரையோடு உங்கள் தமிழறிவை வளர்க்க வந்துள்ளது. இதனைப் பயன்படுத்தி சான்றோனாவதற்கு மேலான முயற்சிகளை மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

> **"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
> **மன்னனின் கற்றோன் சிறப்புடையன்"**
>
> - மூதுரை

**பாராட்டுகளுடன்**
**டால்பின் பதிப்பகத்தார்**

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | **: 9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | **: 9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | **: 9345330937** |
| வலைதளம் (Website) | **: www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | **: dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

KVB Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A
BHIM UPI

ICICI Bank iMobile — BHIM — pockets
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**

CUB CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
328:SRIVILLIPUTHUR
BHIM UPI

| **KARUR VYSYA BANK** | |
|---|---|
| A/C No | : 1804135000006000 |
| IFSC CODE | : KVBL0001804 |
| BRANCH | : Srivilliputtur |

| **CITY UNION BANK** | |
|---|---|
| A/C No | : 328109000204092 |
| IFSC CODE | : CIUB0000328 |
| BRANCH | : Srivilliputtur |

| **ICICI BANK** | |
|---|---|
| A/C No | : 446005500030 |
| IFSC CODE | : ICIC0004460 |
| BRANCH | : Srivilliputtur |

| **TAMILNADU MERCANTILE BANK** | |
|---|---|
| A/C No | : 328150310875103 |
| IFSC CODE | : TMBL0000328 |
| BRANCH | : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பருவம் - 1

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 2 |
| 1. | மொழி<br>தமிழ்த்தேன் | கவிதைப்பேழை | இன்பத்தமிழ் * | 4 |
| | | உரைநடை உலகம் | வளர்தமிழ் | 7 |
| | | விரிவானம் | ஒளி பிறந்தது | 12 |
| | | கற்கண்டு | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | 14 |
| 2. | இயற்கை<br>இயற்கை இன்பம் | கவிதைப்பேழை | ஏதிலிக்குருவிகள் | 21 |
| | | உரைநடை உலகம் | சிறகின் ஓசை | 24 |
| | | விரிவானம் | கிழவனும் கடலும் | 29 |
| | | கற்கண்டு | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 30 |
| | | வாழ்வியல் | திருக்குறள் * | 35 |
| 3. | கல்வி<br>கண்ணெனத் தகும் | கவிதைப்பேழை | கல்வியைப் போற்று * | 39 |
| | | | துன்பத்தை வெல்லும் கல்வி | 42 |
| | | உரைநடை உலகம் | கல்விக்கண் திறந்தவர் | 45 |
| | | விரிவானம் | நூலகம் நோக்கி... | 49 |
| | | கற்கண்டு | மொழிமுதல் எழுத்துகள் | 52 |
| | | மாதிரித் தொகுத்தறித் தேர்வு - செப்டம்பர் 2025 | | 58 |

# பருவம் - 2

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 61 |
| 1. | நாகரிகம், பண்பாடு<br>பாடறிந்து ஒழுகுதல் | கவிதைப்பேழை | ஆசாரக்கோவை | 63 |
| | | | கண்மணியே கண்ணுறங்கு | 67 |
| | | உரைநடை உலகம் | தமிழர் பெருவிழா | 70 |
| | | விரிவானம் | அறிவுசால் ஔவையார் | 74 |
| | | கற்கண்டு | மொழி இறுதி எழுத்துக்ள | 77 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ★ | 83 |
| 2. | தொழில், வணிகம்<br>கூடித் தொழில் செய் | கவிதைப்பேழை | நானிலம் படைத்தவன் | 88 |
| | | | கடலோடு விளையாடு | 92 |
| | | உரைநடை உலகம் | வளரும் வணிகம் | 96 |
| | | விரிவானம் | உழைப்பே மூலதனம் | 100 |
| | | கற்கண்டு | இன எழுத்துக்ள | 102 |
| | | மாதிரித் தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2025 | | 108 |

# பருவம் - 3

## பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | 111 |
| 1. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் புதுமைகள் செய்யும் தேசமிது | கவிதைப்பேழை | பாரதம் அன்றைய நாற்றங்கால் * | 113 |
| | | | பாஞ்சை வளம் | 116 |
| | | உரைநடை உலகம் | தமிழ்நாட்டில் காந்தி | 119 |
| | | விரிவானம் | வேலுநாச்சியார் | 123 |
| | | கற்கண்டு | சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் | 124 |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை எல்லாரும் இன்புற | கவிதைப்பேழை | பராபரக் கண்ணி * | 131 |
| | | உரைநடை உலகம் | நிலம் பொது | 134 |
| | | விரிவானம் | பாதம் | 139 |
| | | கற்கண்டு | நால்வகைச் சொற்கள் | 142 |
| | | வாழ்வியல் | திருக்குறள் * | 147 |
| 3. | மனிதம், ஆளுமை இன்னுயிர் காப்போம் | கவிதைப்பேழை | ஆசிய ஜோதி | 150 |
| | | | இளைய தோழனுக்கு * | 154 |
| | | உரைநடை உலகம் | மனித நேயம் | 157 |
| | | விரிவானம் | முடிவில் ஒரு தொடக்கம் | 161 |
| | | கற்கண்டு | பெயர்ச்சொல் | 163 |
| | | மாதிரித் தொகுத்தறித் தேர்வு - 2026 | | 169 |

# பருவம் – 1

# மனப்பாடப் பகுதிகள்

## இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

- பாரதிதாசன்

---

## திருக்குறள்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

---

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

---

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

---

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

- திருவள்ளுவர்

---

## கல்வியைப் போற்று

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

- கா.ப.செய்குதம்பிப் பாவலர்

# இயல் ஒன்று

# தமிழ்த்தேன்



## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளைப் படித்து அதன் நயங்களைப் போற்றும் திறன் பெறுதல்
- தமிழ்மொழியின் தனிச்சிறப்புகளைப் பட்டியலிடுதல்
- வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பம் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் பெறுதல்
- எழுத்துகளின் வகை தொகைகளை அறிதல்

கவிதைப்பேழை

# இயல் ஒன்று

# இன்பத்தமிழ்

## சொல்லும் பொருளும்

1. **நிருமித்த** - உருவாக்கிய
2. **சமூகம்** - மக்கள் குழு
3. **விளைவு** - வளர்ச்சி
4. **அசதி** - சோர்வு

## நூல் வெளி

பாரதிதாசனின் இயற்பெயர் **சுப்புரத்தினம்**. பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தம் கவிதைகளில் **பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு** முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். எனவே, இவர் **புரட்சிக்கவி** என்று போற்றப்படுகிறார். இவர் **பாவேந்தர்** என்றும் சிறப்பிக்கப்படுகிறார். இப்பாடல், ‘பாரதிதாசன் கவிதைகள்’ என்ற நூலில் ‘தமிழ்’ என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ளது.



## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **ஏற்றத் தாழ்வற்ற ................. அமைய வேண்டும்.**

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு **[அ) சமூகம்]**

2. **நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ................. ஆக இருக்கும்.**

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி **[ஈ) அசதி]**

3. **நிலவு + என்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று **[ஆ) நிலவென்று]**

4. **தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................**

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள் **[ஆ) தமிழெங்கள்]**

5. **'அமுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று **[ஆ) அமுது + என்று]**

6. **'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................**

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர் **[அ) செம்மை + பயிர்]**

## இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | **விளைவுக்கு** | - | பால் | | **நீர்** |
| 2. | **அறிவுக்கு** | - | வேல் | | **தோள்** |
| 3. | **இளமைக்கு** | - | நீர் | | **பால்** |
| 4. | **புலவர்க்கு** | - | தோள் | | **வேல்** |

## ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

எ.கா. பேர் - நேர்

**பேர்** - நீர்

**பேர்** - ஊர்

**பால்** - வேல்

**வான்** - தேன்

**தோள்** - வாள்

## குறுவினா

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**

**பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள்**

- அமுது
- நிலவு
- மணம்

2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**

- நாங்கள் தமிழைத் தாயோடு ஒப்பிடுவோம்.

## சிறுவினா

1. **இன்பத்தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

**இன்பத்தமிழ் - பாடலில் எனக்குப் பிடித்த அடிகள்**

- தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
- தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

2. **சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

- நீர்தான் விவசாயத்திற்கு அடிப்படை.
- விவசாயமே சமூக வளர்ச்சிக்குத் தேவை.
- தமிழ், நீர் போன்று சமூக வளர்ச்சிக்கு உதவுகிறது.

## சிந்தனை வினா

**வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**

- இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் அறக் கருத்துகள் தமிழ் இலக்கியங்களில் உள்ளன.
- கத்தி முனையை விட பேனா முனை வலிமையானது.
- எனவே, சான்றோர் நாவில் தவழும் தமிழ் வேலுடன் ஒப்பிடப்படுகிறது.

---

## கற்பவை கற்றபின்

2. **தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

   - தமிழுக்கு நாங்கள் சூட்ட விரும்பும் பெயர்கள்
     சூரியன், இனிமை, மலர், அழகு, கடல், தென்றல், பனி.

---

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பாவேந்தர் என்று சிறப்பிக்கப்படுபவர் ............ **[பாரதிதாசன்]**
2. அசதி என்பதன் பொருள் ............ **[சோர்வு]**
3. அடிகளின் இறுதியில் வரும் சொற்கள் ஓரே ஓசையில் முடிவதை ........... என்பர். **[இயைபுத்தொடை]u**

---

## குறுவினாக்கள்

1. **பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?**
   - பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம்.

---

2. **பாரதிதாசன் என்று தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?**
   - பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

---

3. **பாரதிதாசன் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறார்?**
   - பாரதிதாசன் புரட்சிக்கவி, பாவேந்தர் என்று சிறப்பிக்கப்படுகிறார்.

உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# வளர்தமிழ்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் .................

அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை **[ஆ) பழமை]**

2. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................

அ) இடன் + புறம் ஆ) இடை + புறம் இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம் **[இ) இடம் + புறம்]**

3. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................

அ) சீறு + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை **[ஆ) சீர்மை + இளமை]**

4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம் இ) சிலம்புதிகாரம் ஈ) சிலபதிகாரம் **[ஆ) சிலப்பதிகாரம்]**

5. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ் இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ் **[ஆ) கணினித்தமிழ்]**

6. ''தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடியவர் .................

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் **[ஆ) பாரதியார்]**

7. 'மா' என்னும் சொல்லின் பொருள் .................

அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா **[இ) விலங்கு]**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ............. **[மொழி]**
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் .............. **[தொல்காப்பியம்]**
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில், அது ............. அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும். **[எண்களின்]**

## சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. **தனிச்சிறப்பு** - தமிழ்மொழி **தனிச்சிறப்பு** வாய்ந்தது.
2. **நாள்தோறும்** - நான் **நாள்தோறும்** மாலையில் விளையாடுவேன்.

---

## குறுவினா

1. **தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**
   - தொல்காப்பியம் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்.
   - அப்படி என்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும்.
   - எனவே தமிழ் மூத்தமொழி எனப்படுகிறது.

---

2. **நீங்கள் அறிந்த தமிழ்க்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
   - சீவகசிந்தாமணி,
   - சிலப்பதிகாரம்,
   - மணிமேகலை,
   - வளையாபதி,
   - குண்டலகேசி.

---

## சிறுவினா

1. **அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?**
   - உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும்.
   - ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயர் இட்டனர் நம் முன்னோர்.
   - பாகற்காய் கசப்புச்சுவை உடையது.
   - அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர்.
   - இவையே அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு ஆகும்.

---

2. **தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**
   - தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.
   - ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
   - பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

---

3. **தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

- தமிழ்மொழி சிறப்புமிக்க செம்மொழியாகும்.
- தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி.
- தமிழ்மொழி சொல்வளம் மிக்கது.
- இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.
- கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புதுமொழியாகவும் தமிழ் திகழ்கிறது.

## சிந்தனை வினா

1. **தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?**

- உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள்.
- உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்துகொண்டால் உயிர்மெய் எழுத்துக்களை எளிதாக ஒலிக்கலாம்.
- எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்து விடும்.
- தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துக்களாகவே அமைந்துள்ளன.
- இதனால் தமிழ் மொழியை எழுதும் முறையும் மிக எளிது தான்.

2. **தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.**

- தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
- செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள்.
- கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.
- தற்போது அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

## தெரிந்து தெளிவோம்

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே - தொல் : 385 |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் - வஞ்சி : 165 |
| தமிழன் | அப்பர் தேவாரம் | ... தமிழன் கண்டாய் - திருத்தாண்டகம் : 23 |

| தாவர இலைப் பெயர்கள் | |
|---|---|
| ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| அருகு, கோரை | புல் |
| நெல், வரகு | தாள் |
| மல்லி | தழை |
| சப்பாத்திக் கள்ளி, தாழை | மடல் |
| கரும்பு, நாணல் | தோகை |
| பனை, தென்னை | ஓலை |
| கமுகு (பாக்கு) | கூந்தல் |

**தமிழ் எண்களை அறிவோம்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க ೦ |

## கற்பவை கற்றபின்

1. **மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**
   - தொல்காப்பியம், நன்னூல் போன்றவை நாம் படிப்பதற்காக எழுதப்பட்டவை.
   - ஆயினும் அவை கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தையும் பெற்றுள்ளன.
   - மூத்த மொழியான தமிழ் - கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புது மொழியாகவும் திகழ்கிறது.
   - செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா எனத் தமிழ்க் கவிதை வடிவம் காலத்திற்கு ஏற்ப மாறி உள்ளது.
   - கட்டுரை, புதினம், சிறுகதை என்று உரைநடை வடிவங்கள் மாறி உள்ளன.
   - வன்பொருள், மென்பொருள், உலாவி, சுட்டி, பதிவிறக்கம் என்று காலத்திற்கேற்ப தமிழ் மொழியில் சொற்களஞ்சியம் பெருகியுள்ளது

2. **தமிழ் மொழி பேசத் தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. வணக்கம் | 4. வரலாமா? | 7. தாருங்கள் | 10. நன்றி |
| 2. வாழ்த்துகள் | 5. அமருங்கள் | 8. நலமா? | |
| 3. வாருங்கள் | 6. தெரியுமா? | 9. போகலாமா? | |

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் ............ எழுத்துகளாகவே அமைந்துள்ளன. **[வலஞ்சுழி]**
2. ............. என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல். **[சீர்மை]**
3. உலகில் ............ மேற்பட்ட மொழிகள் உள்ளன. **[ஆறாயிரத்திற்கும்]**


---

## குறுவினாக்கள்

1. **‘மா’ என்னும் ஒரு சொல் தரும் பல பொருள்களை எழுதுக.**
   - மா - என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அளவு, அறிவு, அழகு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

2. **இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன என்பதற்குச் சான்று தருக.**
   - இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.
   - இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

---



விரிவானம்

# இயல் ஒன்று

# ஒளி பிறந்தது

## மதிப்பீடு

1. **தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?**

   - போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களை பொருத்திக்கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன்.
   - பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழையைக் கொண்டு 300 கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் எனக்குப் பெரு மகிழ்வைத் தந்தது என்றார் அப்துல்கலாம்.

---

## கற்பவை கற்றபின்

1. **கனவு காணுங்கள் என்பது அப்துல் கலாமின் பொன்மொழி. உங்கள் கனவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

**எபினேசர்** - என்ன முருகா இன்று இவ்வளவு உற்சாகமாக இருக்கிறாய்?

**முருகன்** - ஆம் நண்பா! இன்றைக்கு நம் ஆசிரியர் அப்துல்கலாம் பற்றிக் கூறினார் அல்லவா அதிலிருந்து எனக்கும் எதிர்காலக் கனவு கண் முன் நிற்கிறது.

**எபினேசர்** - அப்படியா என்ன அது?

**முருகன்** - விலையில்லா மருத்துவம். எங்கள் கிராமப் பகுதி முழுவதும் நான் பார்க்கப் போகிறேன்.

**எபினேசர்** - அப்படியா? நண்பா உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது.

**முருகன்** - நன்றி. வெறும் வாய் வார்த்தைகளில் இதனைச் சொல்லிவிட்டு நான் சும்மா இருக்கப் போவதில்லை அதற்காகக் கடுமையாக உழைக்கப் போகிறேன்.

**எபினேசர்** - என்ன செய்யப் போகிறாய்?

**முருகன்** - அறிவியல் பாடத்தை நன்றாகப் படிப்பேன்; மேல்நிலை வகுப்பில் அறிவியல் படிப்பேன். மருத்துவர் தகுதித் தேர்வில் பெற்றி பெறுவேன்.

**எபினேசர்** - நல்வாழ்த்துகள்! உன் கனவு நனவாகட்டும் நண்பா!

**முருகன்** - மிக்க நன்றி மகிழ்ச்சி.

---

2. **நீங்கள் நேர்காணல் செய்ய விரும்பும் ஒருவரைக் குறிப்பிடுக. அவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்கலைப் பட்டியலிடுக.**

**நான் நேர்காணல் செய்ய விரும்பும் ஒருவர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் காமராசர் அவர்கள்.**

**காமராசரிடம் கேட்க விரும்பும் வினாக்கள்:-**

- படிக்காத நீங்கள் இத்தனை பள்ளிக்கூடங்களை ஏன் திறக்க நினைத்தீர்கள்?
- மக்கள் உங்களுக்குத் தோல்விகளைத் தந்த போது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?
- எளிமையான வாழ்வு தாங்கள் விரும்பி ஏற்றுக் கொண்டதா?
- காந்தியடிகளிடம் உங்களுக்குப் பிடித்த பண்பு எது?
- விடுதலைப் போராட்டத்தில் தங்கள் பங்கு என்ன?

---

3. **நீங்கள் அப்துல் கலாமிடம் கேட்க விரும்பும் வினாக்களை எழுதுக.**

- அரசுப் பள்ளியில் படித்த உங்களுக்கு ஆங்கில வழியில் மேல்படிப்பு படிக்கும்போது சிரமமாக இல்லையா?
- பள்ளி மாணவர்கள் மீது தங்களுக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்படக் காரணம் என்ன?
- உங்களுக்கு வெளிநாடுகளில் பணிபுரிய வாய்ப்புக் கிடைத்ததா?
- இன்றைய இளைஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்பும் அறிவுரை என்ன?
- நாம் வல்லரசு நாடு ஆகிவிட்டோமா? இல்லையா?
- அறிவியல் ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுகிறதா? 'ஏவுகணை நாயகன்' என்ற முறையில் இதற்குத் தங்களின் பதில் என்ன?

---



கற்கண்டு

# இயல் ஒன்று

# தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

## மதிப்பீடு

### கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் ............ **[அணி]**
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் ............ **[ஆ]**
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ............ **[எஃகு]**
4. நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு ............ **[2 மாத்திரை]**
5. மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு ............ **[அரை மாத்திரை]**

---

### குறுவினா

1. **தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

   **தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை**
   1. எழுத்து இலக்கணம்
   2. சொல் இலக்கணம்
   3. பொருள் இலக்கணம்
   4. யாப்பு இலக்கணம்
   5. அணி இலக்கணம்

---

2. **மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**
   1. வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
   2. மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
   3. இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

---

3. **தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**
   1. குறில் எழுத்து - 1 மாத்திரை
   2. நெடில் எழுத்து - 2 மாத்திரை
   3. மெய்யெழுத்து - அரை மாத்திரை
   4. ஆய்த எழுத்து - அரை மாத்திரை

---

## கற்பவை கற்றபின்

**உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.**

**எ.கா. கபிலர்** - 1 + 1 + 1 + ½ = 3 ½

**எழிலன்** - 1 + 1+ 1 + ½ = 3 ½

**அந்தோணி** - 1 + ½ + 2 + 1 = 4 ½

**முகமது யூசுப்** - 1 + 1 + 1 + 1 + 2 + 1 + ½ = 7 ½

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு ............ மாத்திரை. **[ஒரு]**
2. மெய் என்பது ............. எனப் பொருள்படும். **[உடம்பு]**
3. ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு ............ மாத்திரை. **[அரை]**
4. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை ............. **[216]**
5. தமிழ் இலக்கணம் ............. வகைப்படும். **[ஐந்து]**

### குறுவினாக்கள்

1. **ஒரு மாத்திரைக்குரிய கால அளவு யாது?**
   - ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவே ஒரு மாத்திரைக்குரிய கால அளவாகும்.

2. **உயிர் எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?**
   - வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் அ முதல் ஔ வரை உள்ள பன்னிரண்டு உயிரெழுத்துகளும் பிறக்கின்றன.



# மொழியை ஆள்வோம்

## கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக

* தமிழ் இனிது
* தமிழ் எளிது
* தமிழ் புதிது

**தமிழ் இனிது**

இயற்கையில் அமைந்துள்ள பொருட்களைப் பார்த்தவுடன், நுகர்ந்தவுடன், மனதில் நினைத்தவுடன் நமக்கு இன்பம் வந்துவிடும், அதுபோல தமிழைப் பற்றி நினைத்தவுடன் இன்ப உணர்வு மனதில் தோன்றி விடும். அமுதத்தை உண்ணும்போது கிடைக்கும் மகிழ்ச்சி , தமிழைப் படிக்கும்போது கிடைக்கும்.

பாரதிதாசன் தமிழின் இனிமை பற்றிக் கூறும் போது நன்கு பழுத்த பலாவின் சுவையையும், நன்கு முற்றியிருக்கும் செங்கரும்பின் சாறும், இயற்கையான மலர்களில் இருந்து தேனீக்களால் சேகரிக்கப்பட்ட சுவை மிகுந்த தேனும், பாகு என்றாலே இனிப்பு அந்தப் பாகில் ஊற வைத்த பலகாரத்தின் சுவையையும், பசுவிலிருந்து தூய்மையான பாலும், தென்னை மரத்திலிருந்து புதிதாக இறக்கப்பட்ட குளிர்ந்த இளநீரும் பார்த்தாலே இனிமை தரக்கூடியன என்றாலும் இவை எல்லாவற்றின் இனிமையையும் விட தமிழின் இனிமை மேலானது எனக் கூறுகின்றார்.

**தமிழ் எளிது**

தமிழ் மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர் மெய் எழுத்துகள். உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்துவிடும்.

தமிழ் மொழியை எழுதும் முறையும் மிக எளிது தான். இதற்கு ஏற்ப தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

**தமிழ் புதிது**

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன. இணையம், முகநூல், புலனம், குரல் தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமூக ஊடகங்களான செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாக விளங்குகிறது தமிழ். செய்யுள், கவிதை, புதுக்கவிதை, துளிப்பா என்றும் கட்டுரை, புதினம், சிறுகதை என்றும் தமிழ் காலத்திற்கேற்ப புதுமை மிக்க மொழியாக உருவெடுத்துள்ளது.

**உங்கள் பகுதியில் பழுது அடைந்துள்ள தெருவிளக்குகளைச் சரிசெய்ய வேண்டி, உதவி மின்பொறியாளருக்கு விண்ணப்பம் எழுதுதல்.**

**அனுப்புநர்**

ந.தேன்மொழி,
எண்.5, வேடன் வயல்,
கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643 212.

**பெறுநர்**

உதவி மின் பொறியாளர்,
மின் பொறியாளர் அலுவலகம்,
கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643 212.

**மதிப்பிற்குரிய ஐயா,**

பொருள் : பழுது அடைந்துள்ள தெருவிளக்குகளைச் சரிசெய்ய வேண்டுதல் - சார்பு.

-----

வணக்கம். எங்கள் பகுதியில் சுமார் 200 குடும்பத்தினர் வசித்து வருகிறோம். இங்குள்ள தெருவிளக்குகள் மழை காரணமாகக் கடந்த ஒரு வாரமாக எரியவில்லை. இதனால், இரவு ரேநத்தில் வெளியில் செல்வது மிகவும் கடினமாக உள்ளது. எனவே, பழுது அடைந்துள்ள தெருவிளக்குகளை மாற்றி, புதிய விளக்குகள் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

நாள் : 25.06.2025 தங்கள் உண்மையுள்ள,
இடம் : கூடலூர் ந. தேன்மொழி.

உறைமேல் முகவரி
உதவி மின் பொறியாளர்,
மின் பொறியாளர் அலுவலகம்,
கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643 212.

## கடிதம் எழுதுக.

### விடுப்பு விண்ணப்பம்

**அனுப்புநர்**

ம. பரிதி,
ஆறாம் வகுப்பு, ‘அ’ பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

**பெறுநர்**

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஆறாம் வகுப்பு, ‘அ’ பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

மதிப்பிற்குரிய அம்மா,

வணக்கம். நான் நாளை என் அக்காவின் திருமணத்திற்காக ஊருக்குச் செல்கிறேன். எனவே என்னால் பள்ளிக்கு வர இயலாது. நாளை ஒருநாள் மட்டும் (04-07-2025) எனக்கு விடுப்புத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மிக்க நன்றி,

இப்படிக்கு,

தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,

ம.பரிதி.

**நாள்** - 03.07.2025

**இடம்** - மதுரை.

உறைமேல் முகவரி

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஆறாம் வகுப்பு, 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

# மொழியோடு விளையாடு

## திரட்டுக.

**'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| இனிமை | செம்மை | ஒருமை | தன்மை | இளமை |
| அருமை | நன்மை | பன்மை | உண்மை | பெருமை |

## இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் | மொழி | கோல் | மீன் | நீதி | எழுது |
| கண் | வெளி | தமிழ் | மணி | மாலை | விண் |

**எ.கா. - விண்மீன்**

நீதிநூல், தமிழ்மொழி, எழுதுகோல், கண்மணி, மணிமாலை, விண்வெளி.

## பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அழகு | ஏற்றம் | இன்பம் | ஊக்கம் | இனிமை | ஆற்றல் | ஈடு | இசை |
| உணர்வு | ஏடுகள் | உரிமை | என்றும் | எளிதாய் | உவகை | அன்பு | |

அ - அன்பு தருவது தமிழ்

ஆ - ஆற்றல் தருவது தமிழ்

இ - இன்பம் தருவது தமிழ்

ஈ - ஈடு இல்லாதது தமிழ்

உ - உணர்வு தருவது தமிழ்

ஊ - ஊக்கம் தருவது தமிழ்

எ - என்றும் வேண்டும் தமிழ்

ஏ - ஏற்றம் தருவது தமிழ்

## நிற்க அதற்குத் தக..

**என் பொறுப்புகள்...**

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்.
2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.
3. தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | | | |
|---|---|---|---|
| வலஞ்சுழி | Clock wise | இடஞ்சுழி | Anti Clock wise |
| இணையம் | Internet | குரல்தேடல் | Voice Search |
| தேடுபொறி | Search engine | தொடுதிரை | Touch Screen |
| செயலி | App | மின்னஞ்சல் | E-mail |



விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமுகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646
93453 14146 / 93453 30937

Mail us : dolphin.pub2005@gmail.com Visit us : www.kalvidolphin.com


ICICI Bank iMobile BHIM pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay 94427 17794
63743 17883